# தினகர வெண்பா

(56)

பதிப்பாளர்

S. வையாபுரிப் பிள்ளை B.A., B.L.

தினகரமாலை யென்னும்

# தினகர வெண்பா



சென்னை யூனிவர்ஸிட்டி

தமிழ் லெக்ஸிகன் பதிப்பாசிரியர்

S. வையாபுரிப்பிள்ளை B.A., B.L.,

பரிசோதித்தது.

OFFICE OF THE DIRECTOR OF ARCHAEOLOGY
15 MAR 1971
GOVT. OF MADRAS, MADRAS-

219

Office of the
Director of Archae...
Madras

காபிரைட்] 1932 [விலை அணு 6.

உ

சிவமயம்.

## தினகரமாலை யென்னும்

# தினகர வெண்பா

## முன்னுரை

தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனாருடைய அருமைத் திருக்குறளைத் தமிழறிஞர்கள் எவ்வாறெல்லாம் போற்றி வந்துள்ளார்கள் என வுணர்தற்கு ஓர் கருவியாக விளங்குவது இத் தினகரவெண்பா. இதுபோன்ற நூல்கள் தமிழிற் பலவுள்ளன. அவற்றுள், சோமேசர் முதுமொழி வெண்பா, சிவசிவ வெண்பா, இரங்கேச வெண்பா, வடமலை வெண்பா, திருமலை வெண்பா, திருப்புல்லாணி மாலை, முருகேசர் முதுநெறி வெண்பா, திருத்தொண்டர் வெண்பா என்பன ஒரு சிலவாம். இவையேயன்றி, ஒவ்வொரு திருக்குறட்பாவையும் ஒவ்வொரு விருத்தத்தில் அமைத்து 1330 செய்யுட்களா லியற்றப்பெற்ற ஒரு பெருநூலும் உளது.

இத் தினகர வெண்பா இதுவரை அச்சில் வெளிவராது மறைந்து கிடக்கும் அழகிய நூல்கள் பலவற்றுள் ஒன்று. வள்ளுவரது பெருநூலின் ஒவ்வோரதிகாரத்தினின்றும் ஒவ்வொரு திருக்குறளைப் பொறுக்கியெடுத்து அதனைப் பின்பாதியாக அமைத்துள்ள 133 வெண்பாக்களால் இயன்றதாகும் இந்நூல். எட்டுப்பிரதிகளில் மிகைச்செய்யுட்கள்

சிலவுங் காணப்படுகின்றன. யாழ்ப்பாணத்துச் சுன்னுகம் வித்வான் அ. குமாரசாமிப்பிள்ளை யவர்கள் வெளியிட்ட சதா சாரக் கவித்திரட்டு என்ற தொகை நூலிலும், புதுக்கோட்டை ஸ்ரீ. எஸ். இராதாக்கிருஷ்ண ஐயரவர்கள் பதிப்பித்த வாசக புஸ்தகம் ஒன்றிலும் இந்நூலிலிருந்து ஒரு சில செய்யுட்கள் தரப்பட்டுள்ளன.

இந்நூலின் ஆசிரியரது பெயர் வரலாறு முதலியன சிறிதும் புலப்படவில்லை. 'நாகராசன் புகழும் நன்னகரீக' (118) என்று இதன்கண் வருஞ் செய்யுளால் நூலாசிரியர் பெயர் 'நாகராசன்' என ஊகித்தற்கு இடமுண்டு. இவர் சைவராக இருத்தல் வேண்டும். பாட்டுடைத் தலைவராகிய தினகரர் தொண்டைநாட்டுக் கோவைநகரின ரென்பதும், கருணீகர் குலத்தினரென்பதும், வீரையன் என்பவரது புத்திரரென் பதும், சைவ சமயத்தின ரென்பதும், தமிழருமை யறிந்த கொடையாளி யென்பதும், அச்சுதேந்திரன் என்னும் அரசரது மந்திரியென்பதும், மாவைநகரில் வாழ்ந்துவந்த *உத்தண்டன்

---

* 'உத்தண்டன் கோவை' எனப்பெயரிய நூலொன்று சென்னை அரசாங்கத் தொன்னூல்-நிலயத்தில் உள்ளது. இக் கோவையின் பாட்டுடைத் தலைவர் வேளாளமரபிற் காராளர் வகுப்பிற் களப்பாள கோத்திரத்திற் பிறந்தவர்; விசலூர்கிழான் குன்ற பூபதியின் புத்திரர்; தொண்டைமண்டலத்து ஆமூர்க்கோட்டத்துக் குமிழிநாட்டுத் தையூரில் வாழ்ந்தவர். மந்திரியெனவும், தளத்துக் கதிபதியெனவும், சமரதுங்கனெனவும் கோவையிற் கூறப்படுதலால் இவர் அரசரொருவருக்குச் சேனதிபதியா யிருந்தா ரெனக் கொள்ளல் வேண்டும். கோரக்க கேசரி யெனவும் இவர் வழங்கப்படுகிறார். திருக்கழுக்குன்றில் எழுந்தருளியிருக்கும் சிவபிரானிடத்து மிக்க ஈடுபாடுள்ளவர். தமிழைப் பரிபாலித்துவந்த பெருமக்களுள் இவர் ஒருவர். 'தமிழ்த் தொண்டுபட்டேழ் மனைக்கே தலையுண்ட தையூ ருத்தண்டன்' என்பது கோவை.

என்பவரை நண்பராகப் பெற்றவரென்பதும் இந்நூற் செய்யுட்களால் உணரலாவன. கோவை யென்பது கோவூர் எனவும் நூலிற்பலவிடத்துக் காணப்படுகிறது. இவ்வூர் சேக்கிழாரது அவதாரத் தலமாகிய குன்றத்தூரை யடுத்திருக்கும் கோவூராக இருக்கவேண்டுமெனத் தெரிகிறது. இந்நூல் தோன்றிய காலத்தில் இவ்வூர் பிரசித்தியடைந்திருந்தமை 'கோவூர்முன் காட்டிய பின் குன்றத்தூர் வழி கூட்டி யப்பால் - நாவூர்நுங் காஞ்சிபுரங் காட்டுத றெண்டை நாட்டியல்பே' என்னும் அமிர்தகவிராயரது ஒருதுறைக்கோவை யடிகளானும் உணரப்படும். அச்சுதேந்திரன் 'குன்றை யச்சுதேந்திரன்' என வழங்கப்படுகின்றமையும் எனது கருத்தையே வலியுறுத்தும். தஞ்சை ஸரஸ்வதி மஹாலிலுள்ள தமிழ்ப் புத்தகங்களின் அட்டவணையில் கோவை கோயம்புத்தூரெனக் குறித்திருப்பது பிழையாதல் வேண்டும்.

திருமழிசையிலுள்ள கல்வெட்டொன்றில் (M.E.R. 22 of 1911) 'அச்சுதப்ப நாயக்கரையன் காரியத்துக்குக் கர்த்தரான தினகர பிள்ளை யவர்கள்' எனக் காணப்படுகின்றது. இக் கல்வெட்டு விஜய நகரத்து அரசரான ராமராஜ வேங்கடபதி ராஜய்ய தேவமகாராயர்காலத்தில், ஜய௵ மாசிமீ 18௨ திருவாதிரை நட்சத்திரமும் சோமவாரமும் பெற்ற தினத்தன்று பொறிக்கப்பட்டது. விஜயநகர வரசருடைய ஆதிபத்தியத்தின் கீழாகத் தஞ்சையில் அரசு புரிந்த நாயக்க வமிசத்

---

'குடிதாங்கி யொத்தருள் தையூருத் தண்டன்' என்று இவரைக் குறிக்கும் அடிகள் 'குடிதாங்கி' யென்னும் வள்ளலோடு ஒத்த சிறப்பினராக இவரை மேம்படுத்துரைக்கின்றது. தையூர் என்பது இராசகேசரி நல்லூர் எனவும் தைகை யெனவும் நூலுள் வழங்கப்படுகிறது. இவ் வேளாள தீபனுக்கும் மாவை நகருக்கும் யாதோரியையுங் காணப்படாமையால், இவர் வேறு மாவை உத்தண்டன் வேறு என்றே கொள்ளற்பாலது.

தினருள் ஒருவரே கல்வெட்டிலும் இந்நூலிலும் கூறப்படும்
அச்சுதப்பர். எனவே, இவர் காலமாகிய கி. பி. 16-ம் நூற்
றாண்டின் இறுதியில் இந்நூல் இயற்றப்பெற்றதாகல்வேண்டும்.

எனது நண்பர் திருவாளர் எம். பி. எஸ். துரைசாமி முத
லியாரவர்கள் அன்புடனுதவிய இரண்டு ஏட்டுப் பிரதிகளின்
துணையால் இந்நூல் அச்சுக்குத்தகப் பிரதி செய்யப்பட்டது.
இவற்றுள் ஒரு பிரதி கொல்லம் 1016 ௵ கார்த்திகை௴
13௳ எழுதி முற்றுப்பெற்றது. பிறிதொரு பிரதியின் காலம்
தெரிதற்கில்லை. ஆனால் அதனோடு சேர்த்துக் கோக்கப்பெற்
றுள்ள 'நந்திவிளக்கம்' என்னுஞ் சிறுநூ லொன்றின் முன்
னேட்டில் 964௵ சிலக௵ தை௴ 26௳ என்றெழுதி
யிருப்பதனால் அதன் காலமும் இதுவாகவே இருக்கலாம்.
இப்பிரதியிற் பொருட்பாலின் இறுதிவரையேயுள்ளது. இந்
நூலை அச்சிடத் தொடங்கிய பொழுது தாக்ஷிணாத்திய கலா
நிதி மகாமகோபாத்தியாய உ. வே. சாமிநாதையரவர்கள் தங்
களுடைய கையெழுத்துப் பிரதியைக் கொடுத்துதவினார்கள்.
இதன் இறுதியில் 'வி. சுந்தரேச ஐயர்* எழுதியது.
திருத்தணிகைச் சீர்கருணர் மடம் கந்த பண்டிதர் எழுதினது.
௪௮ பாட்டு வரையில் திருநெல்வேலி அம்பலவாண கவிராய
ரவர்கள் பிரதியோடு ஒப்பிடப்பட்டது. (22-7-'05)' என்று
காணப்படுகிறது. கந்த பண்டிதர் என்பவர் கையெழுத்துப்
பிரதிக்குரிய மூலப்பிரதியை எழுதியோராயிருத்தல் வேண்டும்.
இவர் திருத்தணிகை விசாகப்பெருமா ளையரின் தந்தையா
ராகிய கந்தப்பையரவரென்று ஸ்ரீ சாமிநாதையரவர்கள்
அன்புடன் தெரிவித்தார்கள்.

மேற்கூறிய மூன்று பிரதிகளாலும் ஒருசில செய்யுட்கள்
தெளியக்கூடாதனவா யிருந்தன. இவற்றைத் தஞ்சை ஸரஸ்

---

*இவர்கள் ஸ்ரீ சாமிநாதைய ரவர்களுடைய தம்பியாராவர்.

வதி மஹால் நூல் நிலயத்துப் பிரதிகளோடு ஒப்பு நோக்கிப் பாடபேதங்களைக் குறித்தனுப்பி யுதவியவர் பண்டிதர் ஸ்ரீமான் பி. வி. வரதராஜ சர்மா அவர்கள். இந்நிலயத்தில் 3 பிரதிகள் உள்ளன. ஆனால் இவை யனைத்தும் அபூர்த்தி யான பிரதிகளே. இப்பிரதிகளை யானும் நேரிற் சென்று பார்வையிட்டுப் பிரதிபேதங்களைக் குறித்துக்கொள்ளும் சௌகரியம் பின்னர் வாய்த்தது.

'தங்கமுடி சூடினுந் தங்குணம்வி டார்கசடர்
திங்கள்முடி சூடுந் தினகரா—கொங்கைதனிற்
பாலருந்த விட்டவட்டை பச்சைரத்த முண்ணுமல்லாற்
பாலருந்த மாட்டாது பார்'

என்னும் செய்யுள் தினகர வெண்பாவில் உள்ளதாக வழங்கு கிறதென்று ஆழ்வார் குறிச்சிக் கவிராயரவர்களும் திருவாளர் ராவ்பகதூர் வி. பி. சுப்பிரமணிய முதலியாரவர்களும் அன்புடன் தெரிவித்தார்கள்.

நூல் அச்சியற்றி முடியுந் தருணத்தில் பிறிதொரு குறைப் பிரதியும் மகாமகோபாத்தியாய ஸ்ரீ சாமிநாதைய ரவர்களிடமிருந்து கிடைத்தது. ஐயரவர்கள் தங்கள் ஏட்டுப் பிரதிகளைப் பரிசோதித்துவருங் காலத்து அகப்பட்ட இப் பிரதியை எனது பதிப்பிற்குப் பயன்படும்பொருட்டு உடனே அனுப்பி யுதவினார்கள். இப்பெரியாரது அன்பிற்கு யான் மிகக் கடமைப்பட்டுள்ளேன்.

நூற்பிரதிகள் கொடுத்தும் ஒப்புநோக்கியும் பிறவாறு என்னை யூக்கியும் உதவி புரிந்த அன்பர்களுக்கு யான் யாது கைம்மாறு செய்ய வல்லேன்! அவர்களுக்கு என் மனப்பூர்வ மான நன்றியை யுரிமை யாக்குகின்றேன். இந்நூலை முதன் முதல் தமது பத்திரிகையில் வெளியிட் டுதவிய கலாநிலயப் பத்திராசிரியர்க்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளு கிறேன்.

சென்னை,
1-4-32.

S. வையாபுரிப் பிள்ளை.

# தினகர வெண்பா

## காப்பு

1 முன்பாதி புன்சொல் முழுத்தமிழ் பின்பாதி
யின்பாந் தினகரனே யிங்கிதஞ்செ—யென்பாவில்
வள்ளுவர்வெண் பாக்குறளை வைப்பதனாற் குற்றமெல்லாந்
தள்ளுவர்தா னைப்பெருமாள் தான்.

[1-8 முன்பாதி தன்னில் முதுதமிழின் சீர்புனைந்தே - அன்பாற் றினகரன்பே ராதரித்துப் - பின்பாதி. 3 முழுத்தமிழின். 5 யன்பாந். 6 தினகரா. 7 அங்கிதனால்; அங்கிதஞ்சேர். 10 நன்பாவில். 11 வைப்பக்கேள்; வைப்பதற்கு; வைப்பதற்கென். 13-15 தள்ளுவரே யானைமுகர் தாம்.]

---

குறிப்பு:— ஒவ்வொரு செய்யுளின் கீழும் இருதலைப் பகரத்துள் பாடபேதங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. எண்கள் செய்யுளி லுள்ள சீர்களின் எண்களாம்.

தினகரமாலை யென்னும்

# தினகர வெண்பா

## 1. அறத்துப்பால்

### அதிகாரம். 1. கடவுள்வாழ்த்து

2 உத்தமநூல் கற்று முமாபதிக்கன் பில்லாத
சித்தருனக் கொவ்வார் தினகரா—எத்தனையுங்
கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவ
னற்றா டொழாஅ ரெனின்.

[4 பில்லாச். 5 சித்தருக்.]

### அதி. 2. வான்சிறப்பு

3 என்றுமுகி லைத்தொழுவா ரின்றனக்குத் தோற்றிளம்புற்
சென்றுகவ்வு மொன்னார் தினகரா—நின்று
விசும்பிற் றுளிவீழி னல்லான்மற் றாங்கே
பசும்புற் றலைகாண் பரிது.

[3 ரிங்குனக்குத். 4 தோற்றேபுற்; தோற்றின்பஞ்; தோற்றிளைப்பிற். 5 சென்றுதவு. 6 மென்றே.]

### அதி. 3. நீத்தார்பெருமை

4 தக்ககெடி மன்னவர்நீ தான்சினக்கி லக்கணமே
திக்குவிடப் போவார் தினகரா—ஒக்குங்
குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயுங் காத்த லரிது.

[1-2 தக்க கெடிமன்னர். 1 தக்க கொடி. 2 மன்னவர்கள்; மன்னவனீ; மன்னரை நீ. 3 தாஞ்சினக்கி. 5 திக்குவிட்டுப்; திக்குவிடம். 6 போமே.]

## அதி. 4. அறன்வலியுறுத்தல்

5 வையகத்தில் வாழு மனிதரெல்லா நல்லவறஞ்
செய்வதுவே நன்மை தினகரா—தூய்ய
அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோ டூர்ந்தா னிடை.

[1-4 வையக மேல்வாழு மானிடரெ லாநலறஞ். 1 வையக மேல்; வையமெல்லா. 3 மனுடரெல்லா. 5-6 செய்ய வரிதே; செய்யவே வேணும். 6 கோவைத்.]

## அதி. 5. இல்வாழ்க்கை

6 என்போ டுருகுதவ மேதுக்கா மைந்தரொடுந்
தென்கோவை வாழுந் தினகரா—உன்போல்
இயல்பினு னில்வாழ்க்கை வாழ்பவ னென்பான்
முயல்வாரு ளெல்லாந் தலை.

[1 என்பூ. 2-3 கெவுருக லேதுக்கா. 2 ருெவுதவ. 5 தென் பூவை.]

## அதி. 6. வாழ்க்கைத்துணைநலம்

7 இப்புவிமேற் பெண்ணச் செடுப்பதெல்லாம் பாவமென்று
செப்புவர்காண் கோவைத் தினகரா—அப்படியேன்
பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னுந்
திண்மையுண் டாகப் பெறின்.

[2 பெண்ணட்.; பெண்பேச். 5-6 செப்ப வரிதே. 8 அப் படியே.]

## அதி. 7. புதல்வரைப்பெறுதல்

8 மைந்தரை நீபெற்றாய் மைந்தர்நடை கற்குமுன்னே
செந்தமிழைக் கற்றார் தினகரா—முந்தப்
பெறுமவற்றுள் யாமறிவ தில்லை யறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற.

[5-6 செந்தமிழைப் பெற்றார். 8 முந்திப்.]

9 *புத்திரரோ டுண்ணாத போசனமும் போசனமோ
சித்தருணு கோவைத் தினகரா—நித்தம்
அமிழ்தினு மாற்ற வினிதேதம் மக்கள்
சிறுகை யளாவிய கூழ்.

### அதி. 8. அன்புடைமை

10 இவ்வாழி மண்டலத்தன் பில்லார்க்குன் செங்கோலே
செவ்வாழி கண்டாய் தினகரா—ஒவ்வாதென்
என்பி லதனை வெயில்போலக் காயுமே
யன்பி லதனை யறம்.

[3 பில்லார்க்குஞ் ; பில்லார்க்குள். 4 செங்கோன்மை. 5 செவ்வாளி. 8 ஓவ்வாதோ ; ஓவ்வாதே.]

### அதி. 9. விருந்தோம்பல்

11 நல்ல குணமு நகைமுகமு மில்லவர்பாற்
செல்ல லரிதே தினகரா—மெல்லவே
மோப்பக் குழையு மனிச்ச முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து.

[4 மில்லார்பாற்.]

### அதி. 10. இனியவைகூறல்

12 கொய்யுளைவே ழம்பொன் கொடுப்பதினு மின்சொ லுரை
செய்வதுவே நன்மை தினகரா—டைய
அகனமர்ந் தீதலி னன்றே முகனமர்ந்
தின்சொல னாகப் பெறின்.

[1-2 கொய்யுளைபொன் வேழங். 3-4 கொடுப்பா ரதனிலுரை.]

---

* இச் செய்யுள் ஒருபிரதியில்மாத்திரம் உள்ளது.

## அதி. 11. செய்ந்நன்றியறிதல்

13 புந்திசெய்ய நன்மையே பொல்லாங் கினைச்சிறிதுஞ்
சிந்தைசெய்ய லாமோ தினகரா—சந்ததமும்
நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல
தன்றே மறப்பது நன்று.

[1-2 புந்தியுள்ளோர் செய்த நன்மை. 1 புந்திசெயல். 3-4 பொல்லாங் கெனச்சிறிதுஞ. 5 சிந்தைசெய.]

## அதி. 12. நடுவுநிலைமை

14 ஏந்துமுலை மின்னார்க் கிடைநடுவு நின்றமையாற்
றேய்ந்து மழகாந் தினகரா—போந்த
கெடுவாக வையா துலக நடுவாக
நன்றிக்கட் டங்கியான் றாழ்வு.

[3 கிடைநடுவெண். 5-6 றேய்ந்துமழகாச்சே. 8 போந்து.]

## அதி. 13. அடக்கமுடைமை

15 நல்வசனஞ் சொல்லி நயந்தோர் தமைவணங்கல்
செல்வ முனக்கே தினகரா—அல்லவோ
எல்லார்க்கு நன்றாம் பணித லவருள்ளுஞ்
செல்வர்க்கே செல்வந் தகைத்து.

[4 தலைவணங்கச்; தமைவணங்கச்; தமைவணங்குஞ்; தனை வணங்கல். 5 செல்லு. 6 முனக்குத். 8 அல்லவே.]

## அதி. 14. ஒழுக்கமுடைமை

16 நாகரிக ரானுலென் நற்குலத்த ராலுலென்
சீகருணா கோவைத் தினகரா—ஆகும்
ஒழுக்க முடைமை குடிமை யிழுக்க
மிழிந்த பிறப்பாய் விடும்.

[3 நற்குணத்த. 5-6 சீர்கருணை வேணுர். 8 வாகார்.]

### அதி. 15. பிறனில்விழையாமை

17 நொய்துகொண்டு வாசவன்மெய் நூறு யிரம்பழுது
செய்துகொண்டான் கோவைத் தினகரா—எய்தல்
எளிதென வில்லிறப்பா னெய்துமெஞ் ஞான்றும்
விளியாது நிற்கும் பழி.

[1 நொய்துகொண்ட. 8 வெய்தி; வெய்த.]

### அதி. 16. பொறையுடைமை

18 ஆர்க்கும் பொறுமை யழகியதே யாகாது
தீர்க்க வயிரந் தினகரா—பார்க்குள்
ஒறுத்தார்க் கொருநாளை யின்பம் பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ்.

[3 யழகிதே. 4 யொண்ணுது. 14 தணையும்.]

### அதி. 17. * அழுக்காறமை

19 மாசுடையார் வாழ்வுமொரு வாழ்வோ மணிவயிரத்
தேசுடைய கோவைத் தினகரா—பேசுங்கால்
அவ்விய நெஞ்சத்தா னாக்கமுஞ் செவ்வியான்
கேடு நினைக்கப் படும்.

[1 மாசுடையான். 2-3 வாழ்வொருவாழ்வாமோ. 3-4 மாசிலான்றன்னிரவுங். 4 மணியிரதத்; மணியிர்தித். 5-6 தேசுடையார் கோவூர்த். 5 தேசுடையாய்.]

### அதி. 18. வெஃகாமை

20 நானுசை கொண்டிருக்க நாணுப் பரத்தையர்வாய்த்
தேனுசை கொண்டாய் தினகரா—ஆனுலுஞ்
சிற்றின்பம் வெஃகி யறனல்ல செய்யாரே
மற்றின்பம் வேண்டு பவர்.

[15 மவர்.]

---

* அழுக்கருமை என்றும் பாடம்.

### அதி. 19. புறங்கூறாமை

21 ஏதிலார் பொல்லாங் கெடுத்துரைப்பார் தம்முண்டய
தீது குறியார் தினகரா—யாதும்
பிறன்பழி கூறுவான் றன்பழி யுள்ளுந்
திறன்றெரிந்து கூறப் படும்.

[1 ஏதுடையார்; ஏதில்லாப். 9 புறம்பழி.]

### அதி. 20. பயனிலசொல்லாமை

22 ஓர்ந்துணர்ந்து கொண்டுபய னுண்டாக வோர்வசனந்
தேர்ந்துசொல்ல வேண்டுந் தினகரா—சோர்ந்த
பயனில்சொல் பாராட்டு வானை மகனெனல்
மக்கட் பதடி யெனல்.

[3-4 னுண்டாகி லோர்வசனந். 8 சேர்ந்த.]

### அதி. 21. தீவினையச்சம்

23 ஆவலுடன் ஓடி யலைந்து திரிந்தாலுந்
தீவினைதான் போமோ தினகரா—பூவில்
எனைப்பகை யுற்றாரு முய்வர் வினைப்பகை
வீயாது பின்சென் றடும்.

[2 தேடி. 6 போமே. 10 யெல்லாரு. 15 றிடும்.]

### அதி. 22. ஒப்புரவறிதல்

24 இன்னா ரினியா ரிவரென்று சற்காரஞ்
செய்ந்நாக ரீகா தினகரா—பொன்னுன
புத்தே ளுலகத்து மீண்டும் பெறலரிதே
யொப்புரவி னல்ல பிற.

[3 ரெவரென்று. 4 தற்காரங். 5 தென்னுகை; சென்னுக.]

### அதி. 23. ஈகை

25 மானிடர்க்கு ளூன்போல் வரையாத் தியாகமற்றைத்
தீனரிடத் துண்டோ தினகரா—ஏனும்
இலனென்னு மெவ்வ முரையாமை யீதல்
குலனுடையான் கண்ணே யுள.

[1-2 மானிடர்க்கும் போல; மானிடர்க்குன்போல. 4 தியாகி மறுத்; தியாகமது; தியாகமற்றத்; தியாகிமனத். 8 ஏனோ; தேனே.]

### அதி, 24. புகழ்

26 †கையாற் பரிந்தழைக்கக் கண்டுகுழந் தைச்சோமன்
செய்யசுட்டி யீந்தான் றினகரா—வையத்துத்
தோன்றிற் புகழொடு தோன்றுக வஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று.

[1-2 கையை விரித்தழைக்கக். 8 பையவே.]

27 கல்விக் கடல்கடந்து கற்றறிவு பேசுமவர்
செல்விக்கப் போற்றுந் தினகரா—சொல்லில்
வசையொழிய வாழ்வாரே வாழ்வா ரிசையொழிய
வாழ்வாரே வாழா தவர்.

[2 கரைகடந்தும். 4 பேசியுமென்; பேசியுமார். 5 செல் விகை; செல்விக்கை. 6 பெற்றார்; பெற்றாய்; பெற்றுங்.]

---

† இச்செய்யுள் எட்டுப்பிரதிகளிற் காணப்பெறவில்லை; ஸ்ரீ சாமிநாதையரவர்களுடைய கையெழுத்துப் பிரதியில் 'தினகர வெண்பாவிலுள்ளதென்று மிதிலைப்பட்டி திருச்சிற்றம்பலக் கவிராயரவர்கள் கூறினர்' என்ற குறிப்புக்காணப்படுகிறது; இது செந்தமிழ்ப் பத்திரிகையில் (iii, 68.) முதன்முதலாக வெளியிடப் பெற்றது.

### அதி. 25. அருளுடைமை

28 வாடினர்க்குச் சற்று மருள்வதில்லார் மாநிதியந்
தேடினக்கா லென்னுந் தினகரா—நாடில்
அருட்செல்வஞ் செல்வத்துட் செல்வம் பொருட்செல்வம்
பூரியார் கண்ணு முள.

[2-3 சற்றருளே வையாது; சற்றுமருள் வைத்திலார். 3 மருள் வதில்லா; மருள்வதிலர். 4 காசுபணந். 5-6 தேடித்தானென்ன. 6 லென்ன. 8 நாடி.]

### அதி. 26. புலான்மறுத்தல்

29 மன்னுயிரைத் தாமாய் வதையாமற் கொண்டுபுலால்
தின்னலா மென்பார் தினகரா—என்னே
தினற்பொருட்டாற் கொல்லா துலகெனின் யாரும்
விலைப்பொருட்டா லூன்றருவா ரில்.

[2 தாமே; தம்மால். 3 வையாமற். 4 கொன்றுபுலால். 8 என்னுந். 13 வினைப்பொருட்டா. 14 லூனரிவா.]

### அதி. 27. தவம்

30 தாமதத்தி லன்றிநினைந் தாற்போ லிருந்திடத்தே
சீமைபெற்றாய் கோவைத் தினகரா—ஆமெவர்க்கும்
வேண்டிய வேண்டியாங் கெய்தலாற் செய்தவ
மீண்டு முயலப் படும்.

[1 தாமனத்தி. 3 தாப்போ. 5 சீர்மைபெற்றாய்; சீமைபெற்ற.]

### அதி. 28. கூடாவொழுக்கம்

31 ஒப்போ டொழுகா ருளந்திறந்து பார்க்கவது
செப்போ சிமிழோ தினகரா—இப்பாற்
கணைகொடிது யாழ்கோடு செவ்விதாங் கன்ன
வினைபடு பாலாற் கொளல்.

[8 இப்பார்க். 12 கென்ன.]

### அதி. 29. கள்ளாமை

32 கள்ளர்க்குற் றுருண்டோ கற்றோர் தமிழையெல்லாந்
தெள்ளிப் புனையுந் தினகரா—உள்ளும்
அளவறிந்தார் நெஞ்சத் தறம்போல நிற்குங்
களவறிந்தார் நெஞ்சிற் கரவு.

[1-2 கள்ளற் குறவுண்டோ. 1 கள்ளற்குற். 3 கற்றாய்; கற்றார். 8-9 உள்ளத் தளவறிந்தார். 8 உள்ளம்.]

### அதி. 30. வாய்மை

33 விப்பிரர்தெய் வங்குரவர் வேண்டுநிலைக் காயொருபொய்
செப்பினுநன் றாகுந் தினகரா—ஒப்புரைகேள்
பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின்.

[4-6 காயொருவர் செப்பிலுபதேசங். 4 காயொருக்காற்.]

### அதி. 31. வெகுளாமை

34 ஆரா றுறவாகா ரார்வசமா கார்சினத்தைச்
சேரா திருக்கிற் றினகரா—நேராக
உள்ளிய தெல்லா முடனெய்து முள்ளத்தா
னுள்ளான் வெகுளி யெனின்.

[6 திருந்தாற். 10 வெல்லா.]

### அதி. 32. இன்னாசெய்யாமை

35 குற்றமிகச் செய்தாரைக் கொல்லாமற் கொல்லவொரு
சிற்றறிவா ளுண்டே தினகரா—உற்றதுகேள்
இன்னாசெய் தாரை யொறுத்த லவர்நாண
நன்னயஞ் செய்து விடல்.

[2 செய்வாரைக். 6 ளுண்டோ. 8 மற்றதுகேள்; மற்றிது கேள்; உற்றிதுகேள். 13 நன்னயமே.]

அதி. 33. கொல்லாமை

36 எய்துசிவ பூசை யிருக்கப் பசுப்படுத்துச்
செய்துபல னென்ன தினகரா—பெய்தழலின்
நன்றாகு மாக்கம் பெரிதெனினுஞ் சான்றோர்க்குக்
கொன்றாகு மாக்கங் கடை.

[4 பயப்படுத்துச். 5-6 செய்துலவ தென்ன. 8 பெய்த்தழலின்; பெய்தவினி; செய்தழலின்; பெய்தனல்.]

அதி. 34. நிலையாமை

37 பூசிமுடித் துண்டுடுத்துப் பொன்னுளபோ தேகொடுத்துத்
தேசுபெற வேண்டுந் தினகரா—பேசுங்காற்
கூத்தாட் டவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்
போக்கு மதுவிளிந் தற்று.

[6 வெண்ணுந். 8 காசினியிற்.]

அதி. 35. துறவு

38 ஆரே வெறுப்பவ ராரநரை வந்தபின்பு
தீர வெறுப்பார் தினகரா—பேரருளை
வேண்டினுண் டாகத் துறக்க துறந்தபி
னீண்டியற் பால பல.

[1-4 மாரவெறுப் பானநரை வந்தபின்பு மானிடர்கள்; ஆரவெறுப் பானநரை வந்தபின்பு மானிடர்கள்; ஆரை வெறுப்பர் நரை...தானபின்பு மானிடர்கள்; ஆரவெறுப்பானவரை வந்தபின்பு மானிடர்கள். 5-6 தீரவெறுத் தென்ன; சேரவெறுத் தென்ன.]

அதி. 36. மெய்யுணர்தல்

39 சைவநிலை நின்றுஞ் சமயபே தங்களிலே
செய்வதுண ராரென் தினகரா—எவ்வுரையில்
எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.

[2 யேற்றுஞ். 4 தங்களினுற். 5-6 தெய்வமிகழாதே; செவ்வை தொழாநே.]

### அதி. 37. அவாவறுத்தல்

40 பேதையர்க்கு மோகம் பிறப்பியா தேவிடுமோ
சீதரனே கோவைத் தினகரா—காதல்
அவாவென்ப வெல்லா வுயிர்க்குமெஞ் ஞான்றுந்
தவாஅப் பிறப்பீனும் வித்து.

[1 பேதையர்கள். 2 போகம். 8 சார்தல்; சாதல்.]

### அதி. 38. ஊழ்

41 ஒன்று மறியா ருலகாள்வா ரொள்ளியர்கள்
சென்றிரப்பார் கோவைத் தினகரா—அன்றே
இருவே றுலகத் தியற்கை திருவேறு
தெள்ளிய ராதலும் வேறு.

[3 ருலகாள்வ. 5-6 சென்றிரப்பதென்ன; சென்றிரப்பரன்றே. 6 என்றே. 8. அன்றே.]

அறத்துப்பால் முற்றும்.

---

## II. பொருட்பால்

---

### அதி. 39. இறைமாட்சி

42 மன்னர்க்குச் சீமை வளம்பெறவென் றுலெளிதோ
செங்நெல்நீள் கோவைத் தினகரா—உன்னைப்போற்
காட்சிக் கெளியன் கடுஞ்சொல்ல னல்லனேன்
மீக்கூறு மன்ன னிலம்.

[1 மன்னவற்குச். 5 செங்நெல்சூழ்.]

### அதி. 40. கல்வி

43 எண்ணு மெழுத்துநங் கண்ணெ ன்றியம்பியசொற்
றிண்ணமே யாருந் தினகரா—மண்ணின்மேற்
கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்.

[1-4 எண்ணுமெழுத் துங்கண் ணெனத்தகு மென்பதின் சொற்; எண்ணுமெழுத் துங்கண் ணெனத்தகுமென் றோதிய சொற். 5-6 றிண்ண மெவர்க்குந். 8 மண்ணுலகிற்.]

### அதி. 41. கல்லாமை

44 கல்லாரு நல்லாரே கற்றோர் சபைநடுவே
செல்லா திருக்கிற் றினகரா—சொல்லின்
விலங்கொடு மக்க ளனைய ரிலங்குநூல்
கற்றாரோ டேனை யவர்.

[1 கல்லார்கள். 2 நல்லோர்கள்; நல்லவரே. 6-7 திருக்கத் தினகரா. 8 பொல்லா.]

### அதி. 42. கேள்வி

45 கற்றிலனே யாயினுங் கேட்க வஃதுனுற்றுஞ்
சிற்றறிவை நீக்குந் தினகரா—முற்றும்
இழுக்க லுடையுழி யூற்றுக்கோ லற்றே
யொழுக்க முடையார்வாய்ச் சொல்.

[1-2 கற்றில னயினும். 2 யானுலுங். 4 வுறுகருத்திற்; வது கருத்திற். 5-6 சித்தத்தின் வைக்குந். 8 மற்றும்.]

### அதி. 43. அறிவுடைமை

46 ஓதி யறியுமறி வொன்றுமே போதுமிம
சேதுமட்டும் போற்றுந் தினகரா—போத
அறிவுடையா ரெல்லா முடையா ரறிவிலா
ரென்னுடைய ரேனு மிலர்.

[2-4 யறியு மறிவொன்று மேபோதுஞ். 4 போதுமுயர்; போதுமெனச். 9-15 அறிவுடையா ராவ தறிவா ரறிவிலா ரஃதறி கல்லா தவர்.]

### அதி. 44. குற்றங்கடிதல்

47 ஆரூர்க் குழக்கன் றாக் கன்றோர் குலக்கன்றைத்
தேரூரு வித்தான் றினகரா—பாரூடு
தன்குற்ற நீக்கிப் பிறர்குற்றங் காண்கிற்பி
னென்குற்ற மாகு மிறைக்கு.

[5-6 தேரூர வைத்தான்.]

### அதி. 45. பெரியாரைத்துணைக்கோடல்

48 ஆடுபல தேடலா மானமத யானையொன் று
தேட லரிதே தினகரா—நாடில்
அரியவற்று ளெல்லா மரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல்.

[3 ரேனமதை. 4 யானையொன்றைத். 5-6 தேட வரிதன்றோ.
6 வரிதே.]

### அதி. 46. சிற்றினஞ்சேராமை

49 எய்தரிய புண்ணியவா னென்பதுநின் மைந்தரினுஞ்
செய்தியினுங் கண்டோந் தினகரா—பொய்யோ
மனந்தூயார்க் கெச்சநன் றாகு மினந்தூயார்க்
கில்லைநன் றாகா வினை.

[1. எய்தரிது. 2-3 புண்ணியரென்பதுநின். 4. மைந்தரினுஞ்.
5 செய்தியினும் ; செய்ததினும்.]

### அதி. 47. தெரிந்துசெயல்வகை

50 ஈதலுமின் சொல்லுநல மென்றுசெய்தா லுஞ்சிலர்க்குத்
தீது வருமே தினகரா—ஆதலினால்
நன்றாற்ற லுள்ளுந் தவறுண் டவரவர்
பண்பறிந் தாற்றாக் கடை.

[2-4 சொல்லு நலமென்று செய்தாலும். 3-4. மென்று செய
வேசிலர்க்குத்; 3 மென்னசெய்தா. 5-6 தீது செயமன்றோ; தீது
செயு மன்றே; தீதுவருமோ.]

### அதி. 48. வலியறிதல்

51 மெய்யுலகி லொன்றை விசாரியா மற்பதறிச்
செய்யிற்கூ டாதே தினகரா—பைய
வினைவலியுந் தன்வலியு மாற்றான் வலியுந்
துணைவலியுந் தூக்கிச் செயல்.

[1-4 மெய்யல்லா தொன்றை விசாரியாதே பதறிச். 5-6 செய்யிலது வென்னுங்; செய்யிலது கூடாத்.]

### அதி. 49. காலமறிதல்

52 காலங் கருதிக் கருமம் பதறார்கள்
சீலம் பெரியோர் தினகரா—ஞாலம்
பகல்வெல்லுங் கூகைபைக் காக்கை யிகல்வெல்லும்
வேந்தர்க்கு வேண்டும் பொழுது.

### அதி. 50. இடனறிதல்

53 ஓரிடத்தி லாற்ற லுடையா ரயலொருவர்
சேரிடத்தி லாற்றார் தினகரா—வாரி
நெடும்புன லுள் வெல்லு முதலை யடும்புனலி
னீங்கி னதனைப் பிற.

[1-8 ஒடத்தி லாற்றலுடை யாரா யதிலொருவர் - சேடத்தி லாதார் தினகரா-நாடில். 3-4 லுடையரா யோரொருத்தர். 6 லாகாத். 8 ஆரும்.]

### அதி. 51. தெரிந்துதெளிதல்

54 ஆரார்க்கு நற்குணமு மல்லாத துர்க்குணமுஞ்
சேரா திராது தினகரா—நேராய்க்
குணநாடிக் குற்றமு நாடி யவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்.

[1 யுார் யார்க்கு. 3 மல்லாது. 8 நேராக்; நேரே.]

### அதி. 52. தெரிந்துவினையாடல்

55 ஏற்பதல்ல வேகுருவி யின்கழுத்தி லேபனங்காய்
சேர்ப்பதென்ன கோவைத் தினகரா—நேர்ப்பாய்
இதனை யிதனு லிவன்முடிக்கு மென்றாய்ந்
ததனை யவன்கண் விடல்.

[5 சேர்க்குமதென். 8 பார்க்கில்.]

### அதி. 53. சுற்றந்தழால்

56 ஊரார்க்குச் சோறிடுவ ருற்றாரை யண்டையிலுஞ்
சேராத தென்ன தினகரா—காரியமோ
சுற்றத்தாற் சுற்றப் படவொழுகல் செல்வந்தான்
பெற்றத்தாற் பெற்ற பயன்.

[5 சேராரி.]

### அதி. 54. பொச்சாவாமை

57 எந்தநெடுஞ் செல்வ மிருந்தாலுஞ் செய்கருமஞ்
சிந்தைமற வாதே தினகரா—அந்திபகல்
அச்ச முடையார்க் கரணில்லை யாங்கில்லைப்
பொச்சாப் புடையார்க்கு நன்கு.

[15 நன்று.]

### அதி. 55. செங்கோன்மை

58 கள்ளரையுங் கொல்லுங் கபடரையுந் தண்டித்தல்
தெள்ளிமைகாண் கோவைத் தினகரா—உள்ளங்
கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனொடு நேர்.

[3 கசடரையுந். 4 தெண்டித்தல். 8 உள்ளூம்.]

### அதி. 56. கொடுங்கோன்மை

59 வெய்யகுல மன்னனென்று வேண்டுமென்று லாருமென்
செய்யலாங் கோவைத் தினகரா—கையிலே [ன
வேலொடு நின்றா னிடுவென் றதுபோலுங்
கோலொடு நின்றா னிரவு.

[1-2 வெய்யகொடு வேந்தனென்று. 1 வெய்யகோல்; வெய்ய கொலை. 4 லாகுமெனச்.]

### அதி. 57. வெருவந்தசெய்யாமை

60 ஆவ தறியா ரவருக்கு வேறுபகை
தேவையில்லை கண்டாய் தினகரா—கோவக்
கடுஞ்சொல்லன் கண்ணில னாயி னெடுஞ்செல்வ
நீடின்றி யாங்கே கெடும்.

[3 ரவருக்கே ; ரவர்களுக்கு. 4 வேறுவினை. 6 கோவூர்த்; கோவைத்.]

### அதி. 58. கண்ணோட்டம்

61 ஒன்று தனக்கு முறுப்பில்லா மன்னரெனத்
தின்று கொழுத்தென் தினகரா—என்றுங்
கருமஞ் சிதையாமற் கண்ணோட வல்லார்க்
குரிமை யுடைத்திவ் வுலகு.

[3 முறுப்பற்ற. 4 மன்னவர்கள். 5-6 தின்றுகொழுத் தென்ன. 11-12 கண்ணுடவல்லாற் 11. கண்ணோட்டம்.]

### அதி. 59. ஒற்றடல்

62 வெல்லுமுடி மன்னவற்கு வேண்டுமிரு கண்களுண்டு
தில்லைநடம் போற்றுந் தினகரா—சொல்லவோ
ஒற்று முரைசான்ற நூலு மிவையிரண்டுந்
தெற்றென்க மன்னவன் கண்.

[1 வெல்லுமுடை. 2 மன்னருக்கு. 3 வேறுமிரு. 4 கண்ணுண்டு. 5 தில்லைமடம். 13 தெற்றென்ப.]

### அதி. 60. ஊக்கமுடைமை

63 நிந்திக்கு மற்ப நினைவுகளா லொன்றனையுஞ்
சிந்திக்கொண் ணாது தினகரா—புந்திக்குள்
உள்ளுவ தெல்லா முயர்வுள்ளன் மற்றது
தள்ளினுந் தள்ளாமை நீர்த்து.

[1 நிந்தைக்கு. 3-4 நினைவுள்ளா ரொன்றுகளுஞ்; நினையுளா யொன்றுகளுஞ். 4 லொன்றுகளுஞ். 5-6 சிந்திக்க வொண்ணார். 14 தாளாண்மை.]

### அதி. 61. மடியின்மை

64 உய்யு மனமடிக்க வொண்ணு தொருகருமஞ்
செய்யு மிடத்திற் றினகரா—மையா
மடிமை குடிமைக்கட் டங்கிற்றன் ஞென்ஞர்க்
கடிமை புகுத்தி விடும்.

[6-7 மிடத்துத் தினகரா. 8 மைய; மையா.]

### அதி. 62. ஆள்வினையுடைமை

65 அய்யிருநா ருண்டுவிக்ர மாற்கனுக்குப் பட்டியுந்தான்
தெய்வமுட னீந்தான் றினகரா—மெய்யாக
ஊழையு முப்பக்கங் காண்ப ருலைவின்றித்
தாழா துஞற்று பவர்.

[1-4 ஐயிரு நூருண்டு விக்கிரமா தித்தனுக்குத். 3-4 மாதித்த னுக்கரசு; மாதித்தனுக்கு வையம். 5 செய்கையுட. 8 மெய்யல வோ.]

### அதி. 63. இடுக்கணழியாமை

66 ஒரு முலகிடுக்க ணுற்ற பொழுதீசன்
தீரநகை செய்தான் றினகரா—ஆரும்
இடுக்கண் வருங்கா னகுக வதனை
யடுத்தூர்வ தஃதொப்ப தில்.

[3 ணுள்ள. 3-4 னுற்றபொழு தீசனது. 5-6 தீர நகைத் தான். 6 தீரவகை.]

### அதி. 64. அமைச்சு

67 ஆனகுல மந்திரிநீ யாளுனு நான்சொலக்கேள்
தேன்மருவுங் கோவைத் தினகரா—தானே
பிரித்தலும் பேணிக் கொளலும் பிரிந்தார்ப்
பொருத்தலும் வல்ல தமைச்சு.

[2 மந்திரியே. 5-6 தேன்மருவுஞ் சோலைத். 9 பிரிதலும். 12 பிரிந்தாற்; பிரித்தாற். 13 பொருதலும்.]

### அதி. 65. சொல்வன்மை

68 நித்தத்து வங்கேட்க நின்றகும்ப கன்னனுக்குச்
சித்தித்த தொன்று தினகரா—அத்தனையோ
ஆக்கமுங் கேடு மதனால் வருதலாற்
காத்தோம்பல் சொல்லின்கட் சோர்வு.

[2 வங்கேளா. 5-6 சித்திக்கத் தோன்றும்; சித்தித்ததேதோ. 12 வருவதாற்.]

### அதி. 66. வினைத்தூய்மை

69 ஈன்றாள் பசிகொண் டிருந்தாலுஞ் சோலையெல்லாந்
தேன்றாவுங் கோவைத் தினகரா—சான்றோருக்
கென்று மொருவுதல் வேண்டும் புகழொடு
நன்றி பயவா வினை.

[2 பழிப்புண்.]

### அதி. 67. வினைத்திட்பம்

70 தப்பாமல் வீடணற்குத் தந்தோ மிலங்கையெனச்
செப்பியது செய்தான் றினகரா—இப்புவிமேற்
சொல்லுதல் யார்க்கு மெளிய வரியவாஞ்
சொல்லிய வண்ணஞ் செயல்.

[1-2 தப்பா விபீஷணர்க்குத். 4 மிங்கென்று. 8 இப்புவியிற்; அப்படியே.]

### அதி. 68. வினைசெயல்வகை

71 சும்மாதே யொன்றைத் துணிந்துசெய்ய வொண்ணாது
செம்மாலை மார்பத் தினகரா—தம்மால்
முடிவு மிடையூறு முற்றியாங் கெய்தும்
படுபயனும் பார்த்துச் செயல்.

[1-2 சும்மாதா னென்றைத். 4 வொண்ணுதே. 6மார்பா.]

அதி. 69. தூது

72 அன்றெதிரி செய்தவினைக் கஞ்சாம லேவருக்காய்ச்
சென்றுறுதி சொன்னன் றினகரா—என்றும்
இறுதி பயப்பினு மெஞ்சா திறைவற்
குறுதி பயப்பதாந் தூது.

[1-2 அன்றே யெதிர்செய்வினைக். 2-3 செய்தவினை யஞ்சாம. 2 செய்வினைக். 5 சென்றுதுதி.]

அதி. 70. மன்னரைச்சேர்ந்தொழுகல்

73 மன்ன ரெவர்க்கு வயதுமுறை தேவையில்லைத்
தென்னவதி காரி தினகரா—தன்னின்
இளைய ரினமுறைய ரென்றிகழார் நின்ற
வொளியோ டொழுகப் படும்.

[1-2 மன்னரளவுக்கு; மன்னராளாவுக்கு; மன்னரேவற்கு. 5-6 தென்ன னதிகா; தென்னதிகாரித்; தென்னரதிகாரி.]

அதி. 71. குறிப்பறிதல்

74 கண்பார்வை யாற்குறிப்பைக் காணவெளிதோபுணரித்
திண்பார் புரக்குந் தினகரா—பண்பால்
அடுத்தது காட்டும் பளிங்குபோ னெஞ்சங்
கடுத்தது காட்டு முகம்.

[1 கண்பாரி. 3 காணவரி. 4-5 தோபுணரிற் றிண்பார். 11 பளிங்கேபோ.]

அதி. 72. அவையறிதல்

75 சுந்தரநின் பேரவையுட் சொன்னாற் கருந்தமிழுஞ்
செந்தமிழாங் கோவைத் தினகரா—முந்தைநூல்
கற்றறிந்தார் கல்வி விளங்குங் கசடறச்
சொற்றெரிதல் வல்லா ரகத்து.

[2 பாவையுளஞ்; பொவையுடன்; பேரவையிற் 3 சொன்னார். 8 முந்துநூல். 13 சொற்றெரிய. 15 ரிடத்து.]

## அதி. 73. அவையஞ்சாமை

76 ஆனை குதிரைகா லாட்படைக ளால்மிகுந்த
சேனைவளைந் தாலுந் தினகரா—ஏனைப்
பகையகத்துச் சாவா ரெளிய ரரிய
ரவையகத் தஞ்சா தவர்.

[4 ளால் மிகுத்த.6 சேனைவளைத்.]

## அதி. 74. நாடு

77 தையலார் நாடகஞ்செய் சாலைகளுஞ் சோலைகளுஞ்
செய்யுமுறுப் பல்ல தினகரா—துய்ய
இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்
வல்லரணு நாட்டிற் குறுப்பு.

[1-2 தையமநாட்டுச்; தையமணனாட்டுச்; தையலமர்நாட்டுக்குச்; நையபல்மா நாட்டுக்குச். 3 சாலைவளஞ்; சார்வலஞ். 6பன்று.]

## அதி. 75. அரண்

78 ஆரற் சுவர்க ளரணுமோ அவ்வளவர்
சேரர்க் கிணையாந் தினகரா—வாரி
மணிநீரு மண்ணு மலையு மணிநிழற்
காடு முடைய தரண்.

[1-6 ஆற்ற லறிவுமில்லா வாணுமோ வவ்வளவர்-சேற்றலரிதே. 1 ஆரச். 2-3 சுவரு மரணுமோ. 8 வார்த்த; வார.]

## அதி. 76. பொருள்செயல்வகை

79 காடுமலை நாடுங் கடலோடி யும்பொருளைத்
தேடவே வேண்டுந் தினகரா—நாடுங்கால்
இல்லாரை யெல்லாரு மெள்ளுவர் செல்வரை
யெல்லாருஞ் செய்வர் சிறப்பு.

[1-2 காடு மலையும்.]

## அதி. 77. படைமாட்சி

80 வெல்படையைக் கண்டால் மிகவும் பயந்தோடிச
செல்படையு முண்டோ தினகரா—சொல்வலிய
கூற்றுடன்று மேல்வரினுங் கூடி யெதிர்நிற்கு
மாற்ற லதுவே படை.

[6 மொன்றோ. 8 வல்லியவ்; வல்லாய.]

## அதி. 78. படைச்செருக்கு

81 ஈனர் கொடைத்தமிழி லெள்ளார் கொடாத்தமிழ்செந்
தேனனைய நன்மை தினகரா—ஆனதொரு
கான முயலெய்த வம்பினில் யானை
பிழைத்தவே லேந்த லினிது.

[1-2 ஈனரதோதமிழி. 1-3 ஏனர்க் கொடைத்தமிழெள்ளார்; தானகுடைத்தமிழிலுள்ளோர்; வானங் கொடைத்தமிழிலுள்ளோர். 1-4 யானருகோதத் தமிழாலெள்ளார் கொடாத்தமிழ்ச் செந். 4 கொடைத்தமிழ் செந். 6 கோல்வத்; நன்மைத். 8 ஆனவொரு.]

## அதி. 79. நட்பு

82 உண்மையறி கண்ணோப் புடையாரைக் கண்டவுடன்
றிண்மைநட்புக் கொண்டாய் தினகரா—உண்மை
புணர்ச்சி பழகுதல் வேண்டா வுணர்ச்சிதா
னட்பாங் கிழமை தரும்.

[2 கண்ணுப்; கன்றூப். 3 புடையானைக். 6 கொண்ட. 8பண்மை; அண்மைப்.]

83 *இட்டமாய் வந்தார்க் கிடுக்கணு ணலவரைத்
தெட்டவொண் ணாது தினகரா—உற்றதுகேள்
உடுக்கை யிழந்தவன் கைபோல வாங்கே
யிடுக்கண் களைவதா நட்பு.

* இச்செய்யுள் ஒருபிரதியில் மாத்திரம் உள்ளது.

### அதி. 80. நட்பாராய்தல்

84 உத்தமர்கள் சூழ்மாவை யுத்தண்ட னுள்ளமுமுன்
சித்தமும்போற் கோவைத் தினகரா—ஒத்தாற்
குடிப்பிறந்து தன்கட் பழிநாணு வானைக்
கொடுத்துங் கொளல்வேண்டு நட்பு.

[1-2 உத்தமர்சூழ் மாவையுறை 4 னெண்ணமுமுன். 5 சித்தம்போற். 8 ஒத்தார்; ஒத்த; எத்தாற். 9 குடிப்பிறந்துங்.]

### அதி. 81. பழைமை

85 எப்பொழுதுந் தம்மனத்துக் கேற்கநடப் பார்க்கொரு
திப்பிழைவா ராதோ தினகரா—அப்பொழுது [செய்
பேதைமை யொன்றோ பெருங்கிழமை யென்றுணர்க
நோதக்க நட்டார் செயின்.

[1-2 எப்பொழுது முன்மனத்துக். 2. தன்மனத்துக் 4 பாற்கொரு செய். 6 ராதே. 8 அப்பொழுதும். 10 யென்றோ.]

### அதி 82 தீநட்பு

86 கோதென் றகற்றுங் குணமில்லா நட்பினரைத்
தீதென் றகற்றுந் தினகரா—யாதொன்
றுறுவது சீர்தூக்கு நட்பும் பெறுவது
கொள்வாருங் கள்வரு நேர்.

[3-4 குணமில்லார் நட்பானல்; குணமிலநட் பானவெல்லார். 5-6 தீதென்றே சாற்றுங்.]

### அதி. 83. கூடாநட்பு

87 மாறுகொண்ட வொன்னார் வணங்கிலவ ரைப்பெரி
தேறுவது செய்யார் தினகரா—வேறு [யோர்
தொழுதகை யுள்ளும் படையொடுங்கு மொன்னா
ரழுதகண் ணீரு மனைத்து.

[8 வேறுங்.]

### அதி. 84. பேதைமை

88 ஓதியுடன் கற்று முலகத்தோ டொத்தொழுகார்
தீதகலார் கோவைத் தினகரா—ஆதலினல்
ஓதி யுணர்ந்தும் பிறர்க்குரைத்துந் தானடங்காப்
பேதையிற் பேதையா ரில்.

[1 ஓகையுடன். 2-4 கற்றுமுல கத்தோ டொழுகாதார். 5 தீதாவர். 8 ஆகையினல்.]

### அதி. 85. புல்லறிவாண்மை

89 எம்மையுனைப் போலறிவா னீந்தகொடை யேகொடை
செம்மைபெற வாழுந் தினகரா--சும்மா [யாஞ்
அறிவிலா னெஞ்சுவந் தீதல் பிறிதியாது
மில்லை பெறுவான் றவம்.

[1 எம்மையுமைப். 4 யேகொடையாற். 6 தம்மால்.]

### அதி. 86. இகல்

90 ஒரவே மாறுபா டொண்ணது வந்தாலுந்
தீரவே வேண்டுந் தினகரா—கூறும்
இகலெதிர் சாய்ந்தொழுக வல்லாரை யாரே
மிகலூக்குந் தன்மை யவர்.

[3 டொன்றுது; டொன்றுக. 10 சார்ந்தொழுக.]

### அதி. 87. பகைமாட்சி

91 நால்வகையு மில்லாரை நாடாள வொட்டுவரோ
சேலுகளுங் கோவைத் தினகரா—நூல்வாய்
வழிநோக்கான் வாய்ப்பன செய்யான் பழிநோக்கான்
பண்பிலன் பற்றார்க் கினிது.

[2 மில்லானை. 3-4 நாடாள்வோர் நாட்டுவரோ. 5 சேல்விழையுங்.]

### அதி. 88. பகைத்திறந்தேரிதல்

92 வேற்றுப் பொருள்குறிக்க வேண்டாம் சமர்க்களத்திற்
சேற்றுக் கமலந் தினகரா—மாற்றிப்
பகைநட்பாக் கொண்டொழுகும் பண்புடை யாளன்
றகைமைக்கட் டங்கிற் றுலகு.

[4 தொடைக்கவசச்; தொடைக்களபஞ்; தொடைகளபச். 5 சேர்த்துக்ககத்; சேற்றுக் கமலத். 12 பண்புடை வேந்தன்.]

### அதி. 89. உட்பகை

93 எப்பொழுது மொன்று யிருப்பவர்போ லேமறைத்துச்
செப்பமுடன் வாழ்வார்தினகரா—அப்பொழுதுஞ்
செப்பின் புணர்ச்சிபோற் கூடினுங் கூடாதே
யுட்பகை யுற்ற குடி.

[3-4 யிருப்பது போலே மறைந்து. 12 கூடாவே.]

### அதி. 90. பெரியாரைப்பிழையாமை

94 எஞ்சலிலா வாழ்வு மிராவணனும் போனதொரு
செஞ்சிலையா லன்றோ தினகரா—மிஞ்சு
வகைமாண்ட வாழ்க்கையும் வான்பொருளு மென்னுந்
தகைமாண்ட தக்கார் செறின்.

[1 இன்சொலிலா. 8 மிஞ்ச. 13. தகைமாண்டார்.]

### அதி. 91. பெண்வழிச்சேறல்

95 பெண்புத்தி கேட்குமவர் பேயர்காண் மன்னவர்க்குத்
திண்புத்தி கூறுந் தினகரா—நண்புற்றுப்
பெண்ணேவல் செய்தொழுகு மாண்மையி னுணுடைப்
பெண்ணே பெருமை யுடைத்து.

[3-4 பேய்காணு மன்னருக்குத். பேயரச ரானவர்க்குத். 6 சொல்லுங். 8 நண்புற்ற.]

அதி. 92. வரைவின்மகளிர்

96 ஆரத் தழுவினுமன் பில்லாப் பரத்தையரைச்
சேரத் தகுமோ தினகரா—தேரிற்
பொருட்பெண்டிர் பொய்ம்மை முயக்க மிருட்டறையி
லேதில் பிணந்தழீ இ யற்று.

[1 ஆரைத். 3 பாகாப். 6 தகாதே. 8 சேரிற்; பாரிற்.]

அதி. 3. கள்ளுண்ணாமை

97 வண்டு மதுவுண மாந்தரு மொவ்வாதோ
திண்டிறல்சேர் வீமா தினகரா—உண்டு
களித்தானைக் காரணங் காட்டுதல் கீழ்நீர்க்
குளித்தானைத் தீத்துரீ இ யற்று.

[1-4 வண்டு மதுவு மதந்தருமோ டொவ்வாதே; வண்டு மது மாந்தருமொவ்வாதோ கேட்பாரோ; மண்ட மதுவுண மாந்தருமொ டொவ்வாதே; வண்டுமது மாந்தற்கு மொவ்வாதோ கேட்பாரோ. 4 மொவ்வாதே. 5 திண்டிறலின்; திண்டிறல்.]

அதி. 4. சூது

98 மாபா ரதத்தின் வரலா றறிந்துசிவன்
சீர்பாதம் போற்றுந் தினகரா—ஆபாதர்
ஒன்றெய்தி நூறிழக்குஞ் சூதர்க்கு முண்டாங்கொ
னன்றெய்தி வாழ்வதோ ராறு.

[3-4 வரலாறு கண்டுசிவன். 8 ஆபாதம்.]

---

96a வாரொன்று கும்பமுலை மங்கைமனம் வேறுனல்
சேர்வதங் கென்ன தினகரா—பார்தனிலே
உள்ளன் பிலாதாரை யூடுதே லூன்கவர்ந்த
வெள்ளெலும்பை நாய்கவர்ந் தற்று.

இதன் இறுதியடிகள் திருக்குறளினுள்ளனவல்ல.

### அதி. 95. மருந்து

99 பைவாய் மருந்துகொண்டு பண்டிதரூண் பற்றலர்க்கென்
செய்வார்தென் கோவைத் தினகரா—மெய்வாய்
இழிவறிந் துண்பான்க ணின்பம்போ னிற்குங்
கழிபே ரிரையான்க ணோய்.

[3 பண்டிதரும். 4 பற்றலர்கண். 5 செய்வார்கள்.]

### அதி. 96. குடிமை

100 இன்னநல மின்னகுல மின்னமர பென்றிகழுஞ்
சின்னம் பலவேன் தினகரா—முன்னம்
நிலத்திற் கிடந்தமை கால்காட்டுங் காட்டுங்
குலத்திற் பிறந்தார்வாய்ச் சொல்.

[1 இன்னநில. 3-4 மின்னவரம் பென்றிதென்ன 5-6 சின்னமதி யெண்ணாங்; செங்நெல்சூழ் கோவைத்.]

### அதி. 97. மானம்

101 மானர் துகிலுரிய மன்றிருந்த தென்னவைந்து
சேன பதியார் தினகரா—ஆனல்
மருந்தோமற் றூனோம்பும் வாழ்க்கை பெருந்தகைமை
பீடழிய வந்த விடத்து.

[3-6 மற்றைவர் பார்த்திருந்த தேனே தென்கோவைத். 3-4 மன்றிலிருந் தென்னவந்து. 4 வன்றிருந்த. 6 பதியாய்; பதிகள்.]

### அதி. 98. பெருமை

102 உத்தியின லெல்லாரு மொக்குமென வொண்ணுதே
சித்தசனே கோவைத் தினகரா—வைத்த
பிறப்பொக்கு மெல்லா வுயிர்க்குஞ் சிறப்பொவ்வாச்
செய்தொழில் வேற்றுமை யான்.

[4 வெண்ணுதே; வொண்ணுத. 5 சித்தசனும்.]

### அதி. 99. சான்றண்மை

103 தக்கதொண்டை நன்னாடு சான்றோ ருடைத்தெனுஞ்சொல்
திக்கறிய வந்தாய் தினகரா—ஒக்குமே
ஊழி பெயரினுந் தாம்பெயரார் சான்றாண்மைக்
காழி யெனப்படு வார்.

[5-6 திக்கனவந் தாயே. 5 திக்கென; சிக்கெனவே.]

### அதி. 100. பண்புடைமை

104 ஆசகலு நின்குணத்தை யன்புடனேம் பத்தாறு
தேசமுங்கொண் டாடுந் தினகரா—பேசில்
நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்புபா ராட்டு முலகு.

[3-4 யன்புட னன்பத்தாறு. 11 புரந்த.]

### அதி. 101. நன்றியில்செல்வம்

105 செல்வ மிகப்படைத்துந் தியாகபோ கங்களில்லார்
செல்வமென்ன செல்வந் தினகரா—செல்வங்
கொடுப்பதூஉந் துய்ப்பதூஉ மில்லார்க் கடுக்கிய
கோடியுண் டாயினு மில்.

1-2 செல்வமிக வும்படைத்துத். 2 மிகப் படைத்துத். 4 கங்களில்லாச். 6 கோவைத்.]

### அதி. 102. நாணுடைமை

106 தக்கார்க் குயிரினுநாண் தக்கதன்றோ தண்டமிழெண்
டிக்காருங் கோவைத் தினகரா—புக்கோடி
நாணா லுயிரைத் துறப்ப ருயிர்ப்பொருட்டா
னாண்டுறவார் நாணாள் பவர்.

[2 குயிரினுந் தான்; குலீனமு நாண். 3 தக்க துண்டோ; தக்கதல்லோ. 8 வுக்கோடி.]

## அதி. 103. குடிசெயல்வகை

107 வந்துணையெல் லாரும் வணங்குமது கண்டுசிலர்
சிந்தனைசெய் தென்ன தினகரா—தந்தை சொல்லாற்
குற்ற மிலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்
சுற்றமாச் சுற்று முலகு.

[1 வந்தவரெல். 3 வணங்குவது. 4 கண்டு சில.]

## அதி. 104. உழவு

108 மைபார்த்த புன்பயிர்க்கும் வான்பயிர்க்கும் போய்ப்பலகாற்
செய்பார்க்க வேண்டுந் தினகரா—மெய்பார்த்துச்
செல்லான் கிழவ னிருப்பி னிலம்புலந்
தில்லாளி னூடி விடும்.

[1 மைபாரந்த. 2-3 வின்ப வளர் பயிர்க்கும். 2 கண்ணிக்
கும். 4 போய்ப் பகலாற்.]

## அதி. 105. நல்குரவு

109 வெல்லுங்காண் செல்வரிட்ட வேடமவர் வார்த்தையிலை
செல்லுங்காண் கோவைத் தினகரா—சொல்லுங்கால்
நற்பொரு ணன்குணர்ந்து சொல்லினு நல்கூர்ந்தார்
சொற்பொருள் சோர்வு படும்.

[1 வெல்லலுறுஞ். 2 வெல்வரிட்ட; காதிலிட்ட. 3-4 வேட
மவர்வார்த்தை. 4 வாதைவிலை; வார்த்தை யெல்லாஞ்.]

## அதி. 106. இரவு

110 இன்றிரப்ப தாகா திரந்தாலு முன்னிடத்திற்
சென்றிரப்ப தேற்றந் தினகரா—ஒன்றை
இரத்தலு மீதலே போலுங் கரத்தல்
கனவிலுந் தேற்றாதார் மாட்டு.

### அதி. 107. இரவச்சம்

111 ஏகினவர்க் கில்லை யெனுஞ்சொலினு மின்னாதே
தேகியென்னுஞ் சொல்லுந் தினகரா—தாகமுறும்
ஆவிற்கு நீரென் றிரப்பினு நாவிற்
கிரவி னிளிவந்த தில்.

[3-4 யெனுஞ்சொலின் னாதேந்தத்.]

### அதி. 108. கயமை

112 ஓயாப் பரிவு முபசார முங்கொடையும்
தீயார்க்கொன் றுது தினகரா—வாயாரச்
சொல்லப் பயன்படுவர் சான்றோர் கரும்புபோற்
கொல்லப் பயன்படுங் கீழ்.

[1-2 ஓயாப்புரவு. 3 முபகார. 4 மும்பொறையுங். 5-6 தீயார்க் குண்டாகா; தீயார்க் கொண்ணுது. 6 றுதே.]

பொருட்பால் முற்றும்.

---

## III. காமத்துப்பால்

---

### அதி. 109. தகையணங்குறுத்தல்

113 வேலா சிவயோகி வீரயன்பா லாதரும
சீலாதென் கோவைத் தினகரா—மாலானேன்
பண்டறியேன் கூற்றென் பதனை யினியறிந்தேன்
பெண்டகையாற் பேரமர்க் கட்டு.

[2 சிவயோகீ. 3-4 வீரையன் பாவாகுஞ். 3 வீரியன்பா. 8 மாலென்ப; மாலான.]

### அதி. 110. குறிப்பறிதல்

114 சூதாம் பருவத் துணைமுலையா ராடவர்க்குச்
சேதாம்பல் விள்ளார் தினகரா—வேதாகக்
கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்க
ளென்ன பயனு மில.

[5-6 சேதாம் பலவின். 12 - 13 வாய்ச் சொற்கொண்
டென்ன.]

### அதி. 111. புணர்ச்சிமகிழ்தல்

115 வானுலகில் மண்ணுலகில் மற்றொன் றிற் கண்டதுண்டோ
தேனுவென வீசுந் தினகரா—மானிடர்
கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனு
மொண்டொடி கண்ணே யுள.

2-3 இவ்வுலகில் மற்றொன் றுங். 8 மானிடர்கள்.

### அதி. 112. நலம்புனைந்துரைத்தல்

116 மங்கையர்கள் செய்ய வதனந் தனக்கிணையாய்த்
திங்களையேன் சொல்வார் தினகரா—கங்குல்
அறுவாய் நிறைந்த வவிர்மதிக்குப் போல
மறுவுண்டோ மாதர் முகத்து.

[4 தனக்கினியாய். 5 திங்களையெண். 8 திங்கள்; கங்கன்.]

### அதி. 113. காதற்சிறப்புரைத்தல்

117 இன்னமணி வேண்டா வெனவொறுத்த வுண்கணுள்
தென்னவு தார தினகரா—மன்னிய
பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி
வாலெயி றூறிய நீர்.

[1-6 இன்னமழி வுண்டோ வுரைக்கிலு முங்களிடத் தென்
னவர்தா கோவைத். 1-3 இன்னமனி வேண்டா வெனவெறுக்க.
4 வுங்களுடை. 5-6 தென்னவர்தா ரன்றே. 12 பனிமொழி.]

## அதி. 114. நாணுத்துறவுரைத்தல்

118 நாகரா சன்புகழும் நன்ஞகரீக[வ]ர
சீகருணு கோவைத் தினகரா—ஓகோ
கடலன்ன காம முழந்து மடலேறுப்
பெண்ணிற் பெருந்தக்க தில்.

[1-4 மாகதர் கணம் புகல மான்றே ருலாவிவருஞ். 3-2 கன் புகழும். 4 மாஞகரீகா. 5 சீர்கருணு.]

## அதி. 115. அலரறிவுறுத்தல்

119 தாரார் கமலத் தடம்புயத்தி லின்றெணீ
சேரா திருக்கிற் றினகரா—பேராத
ஊரவர் கவ்வை யெருவாக வன்னைசொல்
நீராக நீளுமிந் நோய்.

[3-4 தடம்புயத்தின் றேகரநீ. 4 லின்றிவளேச். 8 பேராக.]

## அதி. 116. பிரிவாற்றமை

120 தற்பரனே யாறு சமயத்தை யுங்கடந்த
சிற்பரனைப் போற்றுந் தினகரா—எற்பிரிந்து
செல்லாமை யுண்டே லெனக்குரை மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க் குரை.

[8 எற்பரிந்து. 11 லெமக்குரை.]

## அதி. 117. படர்மெலிந்திரங்கல்

121 மின்ஞர் நகைக்கமத வேள்பகைக்க நாஞெருத்தி
தென்ஞ வலரெண் டினகரா—உன்ஞலே
காமக் கடும்புன னீந்திக் கரைகாணேன்
யாமத்தும் யானே யுளேன்.

[4 நாஞெரு பெண். 6 வலரென். 15 யுளன்.]

### அதி. 118. கண்விதுப்பழிதல்

122 போதளவுஞ் சங்கப் புதுமுத்தின் சங்கவதி
சீதளசெந் தாமத் தினகரா—நீதமுவ
வாராக்காற் றுஞ்சா வரிற்றுஞ்சா வாயிடை
யாரஞ ருற்றன கண்.

[2-4 சங்கரிக்கப் புன்னிறத்த வஞ்சவதி.]

### அதி. 119. பசப்புறுபருவரல்

123 தாயிழைக்குஞ் சொல்லாற் றளர்ந்துனது மாலைபெருச்
சேயிழைக்கு வேறுர் தினகரா—தூய
விளக்கற்றம் பார்க்கு மிருளேபோற் கொண்கன்
முயக்கற்றம் பார்க்கும் பசப்பு.

[3-4 தளர்ந்துமன மால்பெற்ற. 6 மென்றோ.]

### அதி. 120. தனிப்படர்மிகுதி

124 உத்தசெயத் தியாகியென்ப ருன்னைப்புன் மாலையிலிச்
சித்துத் தளர்ந்தாள் தினகரா—பத்தில்
ஒருதலையா னின்னுது காமங்காப் போல
விருதலை யானு மினிது.

[1-4 உத்த செயத்தியாகி யென்பருன்னை மாலையிலோர். 5-6 சித்திகமுந் தாராய். 8 பற்றி.]

### அதி. 121. நினைந்தவர்புலம்பல்

125 எங்கிருந்து முன்னைவிடா தேநினைப்போ மிப்புவிமேற்
செங்கை முகிலே தினகரா—மங்கையருக்
குள்ளினுந் தீராப் பெருமகிழ் செய்தலாற்
கள்ளினுங் காம மினிது.

[2-4 முன்னை யிடைவிடாதே நினைப்பாள். 5-6 தெங்கிருந்த கோவைத்.]

### அதி. 122. கனவுநிலையுரைத்தல்

126 நேர்ந்த கனவிலெம்மை நேற்றிரவு வந்துநீ
சேர்ந்தறியாய் கோவைத் தினகரா—போந்து
நனவினா னல்கா தவரைக் கனவினாற்
காண்டலி னுண்டென் னுயிர்.

[2 கனவிலெனை. 3 நேற்றிரவில். 5-6 சேர்ந்ததறியார்; சேர்ந்ததறியாய். 8 போந்த.]

### அதி. 123. பொழுதுகண்டிரங்கல்

127 உன்பவனி காட்டுமோ லொன்று பெறுகோவைத்
தென்பவனி காட்டுந் தினகரா—என்போல்வார்
காலைக்குச் செய்தநன் றென்கொ லெவன்கொல் யான்
மாலைக்குச் செய்த பகை.

[2-4 காட்டுமுத லொன்றுபிறற றெண்டிறலோன். 8 நின் போல்வார்.]

### அதி. 124. உறுப்புநலனழிதல்

128 கொங்கேறு தண்களபக் குன்றையச்சு தேந்திரன்றன்
செங்கோல் செலுத்துந் தினகரா—இங்கே
பணிநீங்கிப் பைந்தொடி சோருந் துணைநீங்கித்
தொல்கவின் வாடிய தோள்.

### அதி. 125. நெஞ்சொடுகிளத்தல்

129 மன்றலமர் சோலை மறுகு தமிழ்மணக்குந்
தென்றலமர் கோவைத் தினகரா—என்றேு
இருந்துள்ளி யென்பரித நெஞ்சே பரிந்துள்ளல்
பைதனோய் செய்தார்க ணில்.

[1 மன்றலார். 2 மாலை. 3 மறுகில். 5 தென்றலூர்.]

### அதி. 126. நிறையழிதல்

130 என்றுமுனைக் கூடேமென் றிட்ட விரதமுட்டச்
சென்றதில்லை யன்றோ தினகரா—நின்று
நிணந்தீயி லிட்டன்ன நெஞ்சினார்க் குண்டோ
புணர்ந்தூடி நிற்பே மெனல்.

[2 கூடேனென். 5-6 சென்றதிலைக் கோவூர்த். 8 நன்று.]

### அதி. 127. அவர்வயின் விதும்பல்

131 எங்களுரை கேளா யிரங்கா யினிநாளைச்
செங்கை முகிலே தினகரா—மங்கை
பெறினென்னும் பெற்றக்கா லென்னு முறினென்னும்
உள்ள முடைந்துக்கக் கால்.

[5-6 செங்கமல மாலைத்.]

### அதி. 128. குறிப்பறிவுறுத்தல்

132 தேர்த்திருநாள் பூசைத் திருப்பணிநீ கண்டபின்னைத்
தீர்த்தமுள்ள கோவைத் தினகரா—பார்த்தால்
மணியிற் றிகழ்தரு நூல்போன் மடந்தை
யணியிற் றிகழ்வதொன் றுண்டு.

[1 சேர்த்திருநாள். 4 கண்டவினை. 5 தீர்த்தபிரான். 6 கோவூர்த். 8 கோத்த.]

### அதி. 129. புணர்ச்சிவிதும்பல்

133 இங்நிலங்க ளெங்குமிடர்நீங்க வெங்களுக்காய்த்
தென்னிலங்கை வென்றாய் தினகரா—உன்னையெதிர்
காணுங்காற் காணேன் றவறாய காணாக்காற்
காணேன் றவறல் லவை.

[3-4 மிரதிநீ யெங்களுக்காய்த். 6 வென்றே; வென்றோய்.]

## அதி. 130. நெஞ்சொடுபுலத்தல்

134 வந்தநெஞ்சை மீள வரவிட வொண்ணுதோ
செந்தமிழ்சேர் கோவைத் தினகரா—பைந்தொடியார்
துன்பத்திற் கியாரே துணையாவார் தாமுடைய
நெஞ்சந் துணையல் வழி.

[3-4 வடவிரவு மொண்ணுதே. 5-6 செந்திருவாள் கோவே.]

## அதி. 131. புலவி

135 நேர்கண்டா யூட னிலவுகண்டாய் மன்மதனுர்
தேர்கண்டாய் கோவைத் தினகரா—சேர்கண்டாய்
உப்பமைந் தற்ருற் புலவி யதுசிறிது
மிக்கற்ரு னீள விடல்.

[1-2 நேர்கண்டாய்கூட. 3 நிணைவு கண்டாய். 4 ய(ட)ல் மதனன். 5 தேர்கண்ட. 8 சேர் கண்ட.]

## அதி. 132. புலவிநுணுக்கம்

136 பாருலா வுங்கண் படைத்தமின்னுர் வீதியெல்லாஞ்
சீருலா வந்தாய் தினகரா—ஊரிலுள்ள
பெண்ணியலா ரெல்லாருங் கண்ணிற் பொதுவுண்பர்
நண்ணேன் பரத்தநின் மார்பு.

[2 வேற்கண். 5-6 சிருலாங் கோவைத்.]

## அதி. 133. ஊடலுவகை

137 வெம்மனத்தி லூடல் விளைத்துடனே கூடிமதன்
செம்மனம்போல் வாழி தினகரா—தம்மனத்தால்
ஊடுதல் காமத்திற் கின்ப மதற்கின்பங்
கூடி முயங்கப் பெறின்.

[1 எம்மனத்தி. 3 விளைந்திடப்பின். 4 மேவினையே. 5 செம்மனை போல். 8 தன் மனையில்.]

காமத்துப்பால் முற்றும்.

# தினகர வெண்பா

முற்றிற்று.

---

உ

# தினகர வெண்பா

## செய்யுள் முதற்குறிப் பகராதி.

[எண்-செய்யுட்களின் எண்]


| | |
|---|---|
| அ | |
| அய்யிருநூ | 65 |
| அன்றெதிரி | 72 |
| ஆ | |
| ஆசகலு | 104 |
| ஆடுபல | 48 |
| ஆர்க்கும் | 18 |
| ஆரத்தழுவினு | 96 |
| ஆரற்சுவர்க | 78 |
| ஆரார்க்கு | 54 |
| ஆராருறவாகா | 34 |
| ஆரூர்க்குழக் | 47 |
| ஆரேவெறுப்ப | 38 |
| ஆவதறியா | 60 |
| ஆவலுடன் | 23 |
| ஆனகுல | 67 |
| ஆனை குதிரை | 76 |
| இ | |
| இட்டமாய் | 83 |
| இங்கிலங்க | 133 |
| இப்புவிமேற் | 7 |
| இவ்வாழி | 10 |
| இன்றிரப்ப | 110 |
| இன்னநல | 100 |
| இன்னமணி | 117 |
| இன்னாரினியா | 24 |
| ஈ | |
| ஈதலுமின் | 50 |
| ஈன்றாள் | 69 |
| ஈனர்கொடை | 81 |
| உ | |
| உண்மையறி | 82 |
| உத்தசெயத் | 124 |
| உத்தமநூல் | 2 |
| உத்தமர்கள் | 84 |
| உத்தியினா | 102 |
| உய்யுமன | 64 |
| உன்பவனி | 127 |
| ஊ | |
| ஊரார்க்குச் | 56 |
| எ | |
| எங்களுரை | 131 |
| எங்கிருந்து | 125 |
| எஞ்சலிலா | 94 |
| எண்ணுமெழுத் | 43 |
| எந்த நெடுஞ் | 57 |
| எப்பொழுது | 93 |
| எப்பொழுதுந் | 85 |
| எம்மையுனைப் | 89 |
| எய்தரிய | 49 |
| எய்துசிவபூசை | 36 |
| என்போடுருகு | 6 |
| என்றுமுகிலைத் | 3 |
| என்றுமுனைக் | 130 |
| ஏ | |
| ஏகினவர்க் | 111 |
| எதிலார் | 21 |
| எந்துமுலை | 14 |
| எற்பதல்ல | 55 |
| ஒ | |
| ஒப்போடொழு | 31 |
| ஒன்றுதனக்கு | 61 |
| ஒன்றுமறியா | 41 |
| ஓ | |
| ஓதியறியு | 46 |
| ஓதியுடன் | 88 |
| ஓயாப்பரிவு | 112 |
| ஓர்ந்துணர்ந்து | 22 |
| ஓரவே | 90 |
| ஓரிடத்தி | 53 |
| ஓருமுலகிடுக்க | 66 |
| க | |
| கண்பார்வை | 74 |
| கல்லாரு | 44 |
| கல்விக் கடல் | 27 |
| கள்ளர்க்குற் | 32 |
| கள்ளரையுங் | 58 |
| கற்றிலனே | 45 |
| கா | |
| காடுமலை | 79 |
| காலங்கருதிக் | 52 |
| கு | |
| குற்றமிகச் | 35 |

| | |
|---|---|
| **கை** | |
| கையாற் பரிக் | 26 |
| **கொ** | |
| கொங்கேறு | 128 |
| கொய்யுளேவே | 12 |
| **கோ** | |
| கோதென்றகற் | 86 |
| **சு** | |
| சுந்தரகின் | 75 |
| சும்மாதே | 71 |
| **சூ** | |
| சூதாம்பருவத் | 114 |
| **செ** | |
| செல்வமிகப் | 105 |
| **சை** | |
| சைவநிலை | 39 |
| **த** | |
| தக்ககெடி | 4 |
| தக்கதொண்டை | 103 |
| தக்கார்க்குயி | 106 |
| தப்பாமல் | 70 |
| தற்பரனே | 120 |
| **தா** | |
| தாமதத்தி | 30 |
| தாயிழைக்குஞ் | 123 |
| தாரார்கமலத் | 119 |
| **தே** | |
| தேர்த்திருநாள் | 132 |
| **தை** | |
| தையலார் | 77 |
| **ந** | |
| நல்லகுணமு | 11 |
| நல்வசனஞ் | 15 |
| **நா** | |
| நாகராசன் | 118 |
| நாகரிக | 16 |
| நால்வகையு | 91 |
| நானுசை | 20 |
| **நி** | |
| நித்தத்துவங் | 68 |
| நிந்திக்கு | 63 |
| **நே** | |
| நேர்கண்டா | 135 |
| நேர்ந்த கன | 126 |
| **நொ** | |
| நொய்துகொண்டு | 17 |
| **பா** | |
| பாருலாவும் | 136 |
| **பு** | |
| புத்திரரோ | 9 |
| புந்திசெய்ய | 13 |
| **பூ** | |
| பூசிமுடித் | 37 |
| **பெ** | |
| பெண்புத்தி | 95 |
| **பே** | |
| பேதையர்க்கு | 40 |
| **பை** | |
| பைவாய் | 99 |
| **போ** | |
| போதளவுஞ் | 122 |
| **ம** | |
| மங்கையர்கள் | 116 |
| மன்றலமர் | 129 |
| மன்னர்க்குச் | 42 |
| மன்னரெவர்க் | 73 |
| மன்னுயிரைத் | 29 |
| **மா** | |
| மாசுடையார் | 19 |
| மாபாரதத்தின் | 98 |
| மாறுகொண்ட | 87 |
| மானுர்துகி | 101 |
| மானிடர்க்கு | 25 |
| **மி** | |
| மின்னுர் | 121 |
| **மு** | |
| முன்பாதி | 1 |
| **மெ** | |
| மெய்யுலகி | 51 |
| **மை** | |
| மைந்தரை | 8 |
| மைபார்த்த | 108 |
| **வ** | |
| வண்டுமேதுவுண | 97 |
| வந்தநெஞ்சை | 134 |
| வந்துனையெல் | 107 |
| **வா** | |
| வாடினர்க்குச் | 28 |
| வாரொன்று | 96அ |
| வானுலகில் | 115 |
| **வி** | |
| விப்பிரர்தெய் | 33 |
| **வெ** | |
| வெம்மனத்தி | 137 |
| வெய்யகுல | 59 |
| வெல்படையை | 80 |
| வெல்லுங்காண் | 109 |
| வெல்லுமுடி | 62 |
| **வே** | |
| வேலாசிவ | 113 |
| வேற்றுப்பொருள் | 92 |
| **வை** | |
| வையகத்தில் | 5 |


**செய்யுள் முதற்குறிப்பகராதி முற்றும்.**

உ

# நூற்பொருள் அகராதி

---

[எண் - செய்யுட்களின் எண்]


அ

அச்சுதேந்திரன் (குன்றை) 128

ஆ

ஆடுபல தேடலாம் ஆனை யொன்று கூடாது 48

ஆரற்சுவர் 78

ஆரூரில் தேரூர்ந்தது 47

ஆவதறியாமை 60

இ

இடை நடுவு நிற்றல் 14

இமசேது 46

இராவணன் அழிந்தது 94

இலங்கை 133

ஈ

ஈச னகைசெய்தமை 66

ஈன்ருள் பசி 69

ஈனர் கொடை 81

உ

உளுற்றுஞ் சிற்றறிவு 45

உத்தசெயத்தியாகி 124

உத்தண்டன் 84

உதாரன் 117

உமாபதிக்கன்பு 2, 98, 113, 120

உலகத்தோ டொழுகல் 88

உலாவருதல் 136

எ

எண் 43

எழுத்து 43

ஐ

ஐம்பத்தாறு தேசமுங் கொண்டாடும் குணம் 104

ஐவருக்குத்தூது 72

ஒ

ஒள்ளியர்கள் 41

க

கண் பார்வை 74

கருந்தமிழ் 75

கல்விக்கடல் 27

கற்ருேர் சபை 44

காலங் கருதிக் கருமம் பதருமை 52

கும்பகன்னன் நித்தத்துவம் கேட்டமை 68

குருவிகழுத்திற் பனங்காய் 55

குலமந்திரி 67

குலமன்னன் 59

குன்றை 128

கெடிமன்னவர் 4

கொடை 37, 89, 115

கொய்யுளை 12

கொல்லாமற் கொல்லுதல் 35

கோவை 6, 7, 9, 16, 19, 30, 40, 41, 42, 55, 58, 59, 67, 69, 75, 84, 88, 91, 99, 102, 106, 109, 113, 118, 126, 129, 132, 134, 135.

ச

சங்கப் புதுமுத்தின் சங்கம் 122
சற்காரம் 24
சித்தசன் 102
சித்தர் 2
சித்தருணன் 9
சிமிழ் 31
சிவபூசை 36
சிவயோகி 113
சிற்றறிவாள் 35
சின்னம் 100
சீகருணன் 16, 118
சீதரன் 40
சீதள செந்தாமம் 122
சீமை 30, 42
சுந்தரன் 75
சும்மாதே 71
செங்கைமுகில் 125, 131
செங்கோலே செவ்வாழி, 10
செந்தமிழ் 8, 32, 106, 134
செப்பு 31
செய்திப் பிழை 85
செல்வம் 15, 105
செல்வரிட்ட வேடம் 109
சேதுமட்டும்போற்றுந் 46
சேரர்க்கிணையாம் 78
சேற்றுக் கமலம் 92
சைவநிலை 39
சோமன் சுட்டியீதல் 26

த

தமிழ் மணக்குந்தென்றல் 129
தமிழைத் தெள்ளிப் புனைதல் 32
தருமசீலன் 113
தவமேதுக்கு 6
தானைப் பெருமாள் 1
திக்குவிடப் போதல் 4
தியாக போகங்கள் 105
தியாகம் 25
திருப்பணி 132
தில்லைநடம் 62
தின்று கொழுத்தல் 61
தீன்கரன் :—தொண்டை நாடு சான்றோருடைத் தெனுஞ் சொல் திக்கறிய வந்தவன் - 103; சீகருணன் - 16, 118; வீரையன் பாலன் - 113.
மணிவயிரத் தேசுடையான் - 19; செம்மாலைமார்பன் - 71, 122; சுந்தரன்-75; சித்தசன் - 102; வீமன் - 97; சித்தருணன்-9; சீதரன் - 40; தென்னிலங்கை வென்றான்-133.
செந்தமிழ்கற்ற மைந்தர்களையுடையவன் - 6, 8, 49.
நல்வசனஞ் சொல்லி நயந்தோர் தமை வணங்குஞ்செல்வன் - 15; சற்காரஞ் செய்ந் நாகரிகன் - 24; ஐம்பத்தாறு தேசமுங் கொண்டாடும் ஆசற்ற குணவான் - 104; அறனல்ல செய்யாதவன் - 20; எய்தரிய புண்ணியவான் - 49; தருமசீலன் - 113.
உமாபதிக் கன்பன் - 2, 98, 120; சிவயோகி - 113; தில்லை நடம் போற்றுபவன் - 62; கோவையில் தேர்த்திருநாள் பூசைத்திருப்பணி கண்டவன் - 132.
கல்வியாளன்-2; கல்விக்கடல் கடந்தவர் செல்விக்கப் போற்றுபவன் - 27; தியாகி-

25; தகுதியறிந்த கொடையாளி-89; இரத்தலையும் எற்றமாக்குபவன் - 110; தென்னவுதாரன் - 117; உத்தசெயத்தியாகி-124; காமதேனுவைப் போல் வீசுபவன் - 115; செங்கை முகில் - 125, 131. நினைந்தாற்போல் இருந்திடத்தே சீமை பெற்றவன் - 30; திண்பார் புரப்பவன் - 74; தென்னவதிகாரி - 73; வளவர்க்குஞ் சேரர்க்கும் இணையானவன் - 78; குல மந்திரி - 67; மன்னவர்க்குத் திண்புத்தி கூறுபவன் - 95; குன்றை யச்சுதேந்திரன் றன் செங்கோல் செலுத்துபவன் - 128; உண்மைநட்புக் கொண்டாரைத் திண்மை நட்புக் கொண்டவன் - 82; மாவை உத்தண்டன் நண்பன் - 84; குணமில்லா நட்பினரைத் தீதென்று அகற்றுபவன் - 86; உத்த செயம் படைத்தவன் - 124; பகை யரசர்கள்மீது கோபங்கொள்ளினும் இரக்கமும் உடையவன் - 3. 4. கற்றோர் தமிழை யெல்லாம் தெள்ளிப் புனைந்தவன் - 32; இமசேது மட்டும் போற்றப் படுபவன் - 46; ஐம்பத்தாறு தேசமுங் கொண்டாடுபவன்- 104; எல்லராலும் வணங்கப் படுபவன் - 107; தென்னவலரால் எண்ணப்படுபவன் - 121; நாகராசன் புகழும் நன்னாகரீகன் - 118.

தீர்க்க வயிரம் 18
தீவினை 23
தீனர் 25
துகிலுரிதல் 101
தெட்ட வொண்ணுமை 83
தெள்ளிமை 58
தென்கோவை 6, 99, 113
தென்னவதிகாரி 73
தென்னவுதாரன் 117
தென்னவலர் 121
தென்னிலங்கை வென்றமை 133
தேகி 111
தேசு 19, 37
தேர்த்திருநாள் 132
தேனு 115
தையலார் 77
தொண்டை நன்னாடு சான்றோருடைத்து 103
தோற்றுப் புற்கவ்வுதல் 3

ந

நட்புக்கோடல் 82
நரைவருதல் 38
நாகராசன் 118
நாகரிகர் 16
நாகரீகன் 24, 118
நாடகஞ்செய்சாலை 77
நாண்உயிரினுந்தக்கது 106
நினைந்தாற்போல் 30

ப

பண்டிதர் 99
பரத்தையர் 20
பவனி 127

பார்புரத்தல் 74
புண்ணியவான் 49
பெண்ணச்சு 7
பெண் புத்தி 95
பேதையர்க்கு மோகம் 40

ம

மங்கையர் வதனந் திங்கள் 116
மதன்செம்மனம் 137
மன்மதன் 135
மன்னர்க்குச் சீமைவளம் 42
மன்னவர்க்குத் திண்புத்தி கூறும் 95
மன்னவன் கண் 62
மாசுடையார் வாழ்வு 19
மாபாரதம் 98
மாலை பெறுதல் 123
மாவை யுத்தண்டன் 84
மைந்தர் 6, 8, 49
மைபார்த்த புன்பயிர் 108

வ

வண்டு மதுவுணமாந்தரு மொவ்வாமை 97
வள்ளுவர் 1
வளவர் 78
வாசவன் மெய் நூறுயிரம் பழுது 17
வாடினர் 28
விக்கிரமாதித்தனுக்குப் பட்டி அய்யிரு நூறுண்டு தெய்வ முடனீந்தது 65
விப்பிரர் 33
விரதமுட்டச் செல்லாமை 130
வீடணற்குத் தந்தோ மிலங்கையெனச் செப்பியது செய்தமை 70
வீமன் 97
வீரயன் பாலன் 113
வேலன் 113

2192

Printed at the B. N. Press, Mount Road, Madras—1932.

சென்னைத் தமிழ் லெக்ஸிகன் பதிப்பாசிரியர்

திரு. S. வையாபுரிப் பிள்ளையவர்களால்

# பதிப்பிக்கப்பெற்ற நூல்கள்

---

## நாம தீப நிகண்டு.

### தமிழகராதி ஆதார நூற்றொகுதி - 1

நிகண்டுகளின் வரலாறு, ஆசிரியரது காலம், நூலின் நயங்கள், முதலியன அடங்கிய சிறந்த முன்னுரை கொண்டது. பொருட் பெயர்களை விளங்கக் கூறும் செவ்விய உரைபாடமுள்ளது. நூலின்கண் வந்துள்ள பொருட்பெயர்க ளனைத்தையும் முற்ற வுணர்த்தும் அனுபந்தம்பெற்றது. சுமார் 12000 சொற்கள் கொண்ட சிற்றகராதியாக உதவுந் தகையது. விலை ரூபா **2-0-0**

## அரும்பொருள் விளக்க நிகண்டு.

### தமிழகராதி ஆதார நூற்றொகுதி - 2

சிறந்த ஒரு சொற் பல்பொருள் நிகண்டு. நிகண்டுகளின் வரலாற்றினை விளக்கும் விரிந்த முன்னுரையுடன் கூடியது. சொல்லின் பொருள்களை யெளிதாகத் தெரிந்துகொள்ளுதற்குப் பலபொரு ளொருசொல் லகராதி சேர்க்கப்பட்டுள்ளது.

விலை ரூபா **1-4-0**

## கம்பராமாயணம்—உயுத்தகாண்டம்.

முதல் மூன்று படலங்கள்: பல ஏட்டுப் பிரதிகளை ஒப்புநோக்கித் திருத்தியது; பாடபேதங்களனைத்துங் கொடுக்கப் பெற்றது.

விலை ரூபா **0-6-0**

## களவியற் காரிகை.

ஒரு சிறந்த அகப்பொரு ளிலக்கண நூல்; முதன் முறை இப்போதுதான் அச்சில் வெளிவந்தது. கிடைத்தற்கரிய பல அரிய நூல்களிலிருந்து எடுக்கப்பெற்ற மேற்கோள்களை யுடையது; பல அனுபந்தங்களையுடையது. தமிழாராய்ச்சியாளர்க்குப் பெரிதும் பயன்படுவது. க்ரௌன் அளவில் 170 பக்கங் கொண்டது. சொற்பப் பிரதிகளே யுள்ளன. விலை ரூபா **3-0-0**

**இராஜசுந்தரம்** (ஒரு நவீனகம்) விலை ரூபா **0-8-0**